முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1347

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.06.2023, புதன்கிழமை

1. ஞானபலம் கொண்ட தேசிகனே
ஞானிகளை உலகமெங்கும் படைக்க
தானதர்ம வழிகொண்டு இனிதே
தவசியாய் உலகோர்க்கு அருளுகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 24 ம் நாள், 07.06.2023, புதன்கிழமை)
வரமென அரங்கன் உன்வழி வந்து
வையகத்தார் திருவடி பணிந்து தீட்சை
3. தீட்சையாக சடாட்சர ஜெபதபம்
செப்பிடுவேன் உன் ஆசி பட ஏற்று
தட்டாது நித்திய பூஜையாக செய்து
தவசி நீ காட்டுகின்ற தர்மவழியை
4. வழியை உலகோர் வழிமொழிந்து ஏற்று
வையகம் எங்கும் செய்தால் போதுமப்பா
அழியாமை என்கின்ற மகா சக்தி
அகிலத்தார் அவரவர்க்கும் ஆறுமுகன் என் ஆசிபட
5. ஆசிபட ஆற்றலாக கிட்டி இனிதே
அகிலத்தார் ஞானிகளாவரப்பா
தட்டாது அரங்கன் வந்த நோக்கம்
தரணியில் பூர்த்தியாகும்படி சேவை
6. சேவை உலகமெல்லாம் பரவி
சுப்ரமணியர் யானும் வெளிப்படும் வண்ணம்
அவனியில் அற்புதம் நிகழுமப்பா
அரங்கனை அன்னதனால் உலகோர் அணுக அனைத்தும் மாற்றமாக வந்தடையும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—